# உள சமூக ஆற்றுப்படுத்துகைகளாகக் கவிதைகள்: அகிலன் மற்றும் நிலாந்தன் ஆகியோரது கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**க. அருந்தாகரன்**
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்:**

இந்த ஆய்வானது கவிதை என்னும் கலைவடிவம் எவ்வாறு கூட்டு மனக்காயங்களை - உளசமூக நெருக்கீடுகளைக் கடந்து செல்வதற்கான கலையூடகமாக தொழிற்படுகின்றது என்பது பற்றி ஆராய்கின்றது. இதற்கு அகிலனின் 'பதுங்குகுழி நாட்கள்', 'சரமகவிகள்' மற்றும் நிலாந்தனின் 'யுகபுராணம்' ஆகிய கவிதைப் பிரதிகள் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன. கவிதை அடிப்படையில் தனித்துவமான மன உணர்வெளிச்சிகளின் வெளிப்பாடாகவே அமையும் கலைவடிவமாதலால் தனிமனித மற்றும் சமூக உள நெருக்கீடுகளையும், கூட்டு மனக்காயங்களையும், துயரங்களையும் வெளிப்படுத்தவும், பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பான கலை ஊடகமாகவும் அவற்றைக் கடந்து செல்வதற்கான வழியாகவும் அமைந்து விடுகின்றது. ஈழத்தில் யுத்தம் ஏற்படுத்திய உளநெருக்கீடு மற்றும் கொதிநிலைகளிலிருந்து மேற்கிளம்பிய மேற்படி கவிதை தொகுதிகளை, உளவியல் மற்றும் அழகியல் முறைகளினூடாக அணுகி, அவை யுத்தத்தையும், அதன் குரூரத்தையும், அதை உந்தித்தள்ளிய கருந்து நிலைகளையும் எவ்வாறு கேள்விக்குள்ளாக்குகின்றன? அத்துயரங்களிலிருந்தும் காயங்களிலிருந்தும் எவ்வாறு கடந்து செல்ல முயல்கின்றன? வாழ்க்கை பற்றியும், எதிர்காலம் பற்றியதுமான நம்பிக்கையினை எவ்வாறு கட்டி எழுப்ப முயல்கின்றன? இவையாவற்றையும் அவை எவ்வாறு உளவியல் மற்றும் அழகியல் நேர்வுகளாக வெளிப்படுத்துகின்றன என்பது பற்றி ஆராய்கின்றது. அதற்கான மொழியுடலை எவ்வாறு கட்டுகின்றன என்பது பற்றியும் இங்கு ஆராயப்படுகின்றது.

***பிரதான சொற்பதங்கள்**: அழகியல், உளவியல், உளசமூக ஆற்றுப்படுத்தல், கட்டவிழ்ப்பு, கவிதை, கூட்டுமனக்காயம்.*

## அறிமுகம்

இலங்கையில் சுமார் முப்பதாண்டுகளுக்கும் மேலாக நிகழ்ந்தேறிய யுத்தமானது ஈழத்தமிழ்ச் சமூகத்தினரிடையே மீளமுடியாத துயரங்களையும், மன நெருக்கீடுகளையம், கூட்டு மனவடுக்களையும் எதிர்காலம் பற்றிய கேள்விகளையும் உருவாக்கியுள்ளன. இத்தகைய உளசமூக பாதிப்புக்களின் கொதிநிலையிலிருந்து கவிதை, புனைகதை முதலான கலைப்படைப்பாக்க முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் கவிதை, அடிப்படையில் மனித உணர்வுகளை அவற்றின் வீரியத்தோடு கலையாக்கவல்ல வடிவமாக அமைகின்றமையினால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தனிமனித மற்றும் சமூக உளவெளிப்பாடுகளாக கவிதைகளே அதிகம் வெளிவந்துள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்க கவிதைகளாக பா.அகிலன் மற்றும் நிலாந்தன் ஆகியோரது கவிதைகள் விளங்குகின்றன. இவை யுத்தத்தையும் அதன் குரூரங்களையும் அதனை உந்தித்தள்ளிய கருத்து நிலைப்பாடுகளையும் கேள்விக்குள்ளாக்கியதுடன் யுத்தம் தந்த மனவடுக்களையும் கூட்டு மனக்காயங்களையும் பொதுவழியில் பகிர்ந்ததுடன் அவற்றைக் கடந்து செல்வதற்கான முனைப்பையும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையினையும் உளவியல் மற்றும் அழகியல் சாத்தியங்களோடு முன்வைக்கின்றன. ஒரு அர்த்தத்தில் அவை கலையாக்கங்களாகவும் இன்னொரு அர்த்தத்தில் உளசமூக ஆற்றுப்படுத்தல்களுக்கான வழியாகவும் அமைந்து விடுகின்றன. ஆனால் இக்கவிதைகளை உளவியல் மற்றும் அழகியல் முறைகளை முன்னிறுத்தி முழுமையான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அவற்றின்

உளவியல் சமூக மற்றும் அழகியல் பெறுமானங்களையும் முக்கியத்துவங்களையும் விளக்கிக் கொள்ள முடியாது போவதுடன் அவை எவ்வாறு ஒரு குறிப்பிட்ட கால சமூக மற்றும் தனிமனித மன அடுக்குகளை உன்னதமான கலைவெளிப்பாடுகளாகவும் சமூக ஆற்றுப்படுத்தலுக்கான அடிப்படைகளாவும் ஆகியுள்ளன என்பது பற்றியும் விளங்கிக் கொள்ள முடியாது போகின்றது. எனவே அவற்றை ஆழ்நிலை வாசிப்புக்கு உட்படுத்தி அவை பற்றிய முழுமையான மதிப்பீட்டினையும் விமர்சனத்தையும் முன்வைக்க வேண்டியதும் மிக முக்கியமான புலமைப்பணியாக உணரப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படும் கவிதைத் தொகுதிகள் குறித்து சில கட்டுரைகள மற்றும் குறிப்புக்கள் சில வெளிவந்த போதும் அவை பற்றிய மேலெழுந்தவாரியான குறிப்புக்களாகவே அமைந்துள்ளன. அக்கவிதைகளை அவற்றின் தோற்றக் காலப்பின்னணியுடன் சூழமைவுபடுத்தி பார்க்கத் தவறியுள்ளதோடு அவை அடிப்படையில் கலையாகவும் சமூக ஆற்றுப்படுத்தல்களுக்கான அடிப்படைகளாகவும் எவ்வாறு இயங்குகின்றன என்பது பற்றியோ அல்லது பாதிக்கப்பட்ட சமூகமொன்று மீண்டெழுந்து தனது இருப்பையும் எதிர்காலத்தையும் கட்டுவதற்கான நம்பிக்கையை எவ்வாறு அழகியல் மற்றும் உளவியல் நேர்வுகளாக கட்டுகின்றன என்பது பற்றியோ பார்க்கப்படாமை முக்கியமான ஆய்வுப் பிரச்சினைகளாக இங்கு இனங்காணப்படுகின்றன.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வானது உளவியல் மற்றும் அழகியல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட விபரண முறையியலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. கவிதையின் அழகியல் தர்க்கங்களை விளங்கிக் கொள்வதற்கு அழகியல் முறையும் அவை எவ்வாறு உளசமூக அடிப்படைகளை வெளிப்படுத்தும் படைப்புக்களாக இயங்குகின்றன என்பதனை விளங்கிக்கொள்வதற்கு உளவியல் முறையும் அடிப்படையாக கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு நோக்கும் இலக்கும்**

**நோக்கு**

- அகிலன் மற்றும் நிலாந்தனின் கவிதைகளை உளவியல் மற்றும் அழகியல் அடிப்படையில் நோக்கி அவை எவ்வாறு உளசமூக ஆற்றுப்படுத்தல்களாக - கூட்டு மனக்காயங்களைக் கடந்து செல்வதற்கான கலையூடகமாக தொழிற்படுகின்றன என்பதனை வெளிக்கொண்டு வருதல்

**இலக்கு**

- கவிதை அடிப்படையில் மன உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அமைகின்றது என்பதினை விளக்குதல்.
- இதனால் ஒடுக்கப்பட்ட உணர்வுகள் மனக்காயங்கள் வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பான கலை ஊடகமாக அது இயங்குவதை எடுத்துக்காட்டல்.
- யுத்தம் ஏற்படுத்திய உள சமூக நெருக்கீடுகளின் கலைநிலை வெளிப்பாடுகளாகவும் உயிர்வாழும் சாட்சியங்களாகவும் அமைவதுடன் அவற்றைக் கடந்து செல்வதற்குமான அடிப்படைகளாகவும் எவ்வாறு அகிலன் மற்றும் நிலாந்தனின் கவிதைகள் அமைகின்றன என்பதை விளக்குதல்.

- சமூக இருப்பு மற்றும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகளை கட்டியெழுப்புவதற்கான அடிப்படையாக அமையும் முறையினை விளக்குதல்.
- அடிப்படையில் கலையாகவும் சமூக ஆற்றுப்படுத்தல்களுக்கான வழியாகவும் அவை அடையும் வெற்றியினை மதிப்பிடுதல்.

**கண்டுபிடிப்புக்களும் மதிப்பீடும்.**

- கலைகள் அடிப்படையில் மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளாக அமைகின்றன.
- இதனால் ஒடுக்கப்பட்ட உணர்வுகள் மற்றும் உளப்பாதிப்புக்கள் - ஆறாவடுக்களை அதன் சாத்தியப்பாடோடு வெளிப்படுத்த கவிதை வாய்ப்பான ஊடகமாக அமைகின்றது.
- முப்பதாண்டுகால யுத்தம் ஏற்படுத்திய உளசமூக பாதிப்புக்களையும் உளவியல் மற்றும் அழகியல் நேர்த்தியுடன் மேற்படி கவிதைகள் பதிவு செய்துள்ளதுடன் கலைநிலை சாட்சியங்களாகவும் வெளிப்பட்டுள்ளன.
- துயரத்தை எழுதுவதன் மூலமும் வாசிப்பதன் மூலமும் அவற்றைக் கடந்து சென்று மீண்டெழுவதற்கான உந்துதல்களை தருவதில் அவை வெற்றிகண்டுள்ளன.